2008–2009ம் ஆண்டு முதல் ஊரக கட்டமைப்புத் திட்டம் என்னும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை

அரசாணை (நிலை) எண். 111 நாள்: 27.6.2008.

படிக்கப்பட்டவை:

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.93133/2008, பராநிII.2 நாள் 24.5.2008.
2. அரசாணை (நிலை) எண்.95, ஊ.வ (ம) ஊ, நாள் 6.6.2008.

ஆணை:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் 16.4.2008 அன்று துறையின் மானியக் கோரிக்கையின் போது, கீழ்க்காணும் அறிவிப்பினை சட்டமன்ற பேரவையில் அறிவித்தார்கள்.

“ 1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதால், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY) மத்திய அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டிடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும் அவைகளை நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. எனவே, ஊரக கட்டமைப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 2008–09ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி அதற்காக இந்த ஆண்டு 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்”.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவையான கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். படிக்கப்பட்டவை இரண்டாவதாக உள்ள அரசாணையில் 2008–2009ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மாநில நிதி ஆணைய மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.161493.46 லட்சங்கள், கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு முறையே 60:32:8 என்ற விகிதாசாரத்தில் பிரித்து முறையே ரூ.96896.08 லட்சங்கள், ரூ.51677.91 லட்சங்கள் மற்றும் ரூ.12919.47 லட்சங்கள் என்று கணக்கிட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

i) 2008–2009ம் ஆண்டு முதல் ஊரக கட்டமைப்புத் திட்டத்தினை செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

ii) இத்திட்டத்திற்குத் தேவையான ரூ.350 கோடி நிதியினை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான மாநில நிதி ஆணைய மான்ய ஒதுக்கீட்டில் இருந்து கீழ்க்கண்டவாறு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

ஊரக கட்டமைப்புத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு

1	கிராம ஊராட்சிகள்	ரூ. 200 கோடி
2	ஊராட்சி ஒன்றியங்கள்	ரூ. 100 கோடி
3	மாவட்ட ஊராட்சிகள்	ரூ. 50 கோடி
	மொத்தம்	ரூ. 350 கோடி

iii) மேற்கண்ட தொகையினை மூன்றடுக்கு ஊராட்சிகளின் மாநில நிதி ஆணைய மான்யத் தொகையிலிருந்து 10 தவணைகளாக பிடித்தம் செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், இதன் அடிப்படையில், ஊரக கட்டமைப்புத் திட்டத்திற்கு மாதாந்திர அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிதி விடுவிப்பு செய்யவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

ஊரக கட்டமைப்புத் திட்டத்திற்கான மாதாந்திர ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

கிராம ஊராட்சிகளின் பங்கு	ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு	மாவட்ட ஊராட்சிகளின் பங்கு
20	10	5

iv) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கீழ்க்கண்ட அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

அ) கிராம ஊராட்சிகள்:

கிராம ஊராட்சிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 200 கோடியில், **குறைந்த பட்ச மான்யமாக** ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ரூ. 1 லட்சம் வீதமும் (அதாவது 12618 X ரூ.1 லட்சம் = ரூ.126.18 கோடி) மீதமுள்ள ரூ. 73.82 கோடியினை மக்கள் தொகை அடிப்படையிலும் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட வேண்டும்.

ஆ) ஊராட்சி ஒன்றியங்கள்:

ஊராட்சி ஒன்றியங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.100 கோடியில் குறைந்த பட்ச மான்யமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.10 லட்சம் வீதமும் (அதாவது 385 X ரூ.10 லட்சம் = ரூ.38.50 கோடி), மீதமுள்ள ரூ. 61.50 கோடியினை மக்கள் தொகை அடிப்படையிலும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விடுவிக்கப்பட வேண்டும்.

இ) மாவட்ட ஊராட்சிகள் :

மாவட்ட ஊராட்சிகளுக்கான ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறைந்த பட்ச மான்யமாக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூ. 50 லட்சம் வீதமும் (அதாவது 29 X ரூ.50 லட்சம் = ரூ.14.50 கோடி), மீதமுள்ள ரூ. 35.50 கோடியினை மக்கள் தொகை அடிப்படையிலும் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட வேண்டும்.

v) மேற்கண்ட வழிமுறைகளின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு வாரியாக மற்றும் மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிப்பு செய்ய வேண்டும். மேற்கண்ட தொகையினை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.249/ SS(PK)/RD/ 2008 நாள் 4.6.2008ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

அரசாணை (நிலை) எண்.111 , ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 27.6.2008.

<u>இணைப்பு</u>

ஊரக கட்டமைப்புத் திட்டம் 2008–2009ம் ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

1.4.2008 முதல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் நிலையில், ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத்த திட்டம் மத்திய அரசால் கைவிடப்பட்டுள்ளது. தற்போது, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் குளங்கள், கால்வாய்கள் ஊரணிகள் தூர் வாருதல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் தமிழ்நாட்டில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படாமல் நேரடியாக மனித உழைப்பு மூலம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையிலும் பல்வேறு அவசியமான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அத்திட்டமும் கைவிடப்பட்டுள்ள நிலையில் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தியும், இயந்திரங்களை ஈடுபடுத்தியும் ஊரக கட்டுமானப் பணிகள் ஏற்கனவே உள்ள மத்திய அரசுத் திட்டங்களில் போதுமான அளவுக்கு பணிகள் எடுக்கப்படுவதில்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைத்திருக்க கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது.

ஊரக கட்டமைப்புத் திட்டம் தொடங்குவதால் கிராமங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துகளை நிலைத்திருக்க கூடியதாக மாற்றும் இரு நோக்கங்களையும் நிறைவு செய்யும்.

2) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்திலிருந்து வேறுபாடு:

ஊரக கட்டமைப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்திலிருந்து கீழ்க்கண்டவாறு வேறுபடுகிறது.

i) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் ஊரக கட்டமைப்புத் திட்டப்பணிகளை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலும், இயந்திரங்களைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளலாம்.

ii) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைப் போல அல்லாமல், இத்திட்டத்தின் கீழ் பணியாளர் வருகைப் பதிவேடு பராமரிக்க வேண்டிய தேவையில்லை.

iii) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 50:30:20 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 67:22:11 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

iv) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூலியில் ஒருபகுதி உணவு தான்யமாகவும் மீதம் ரொக்கமாகவும் வழங்கப்படுவதைப் போல அல்லாமல் ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கூலி முற்றிலும் ரொக்கமாக வழங்கப்படும்.

v) சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படும் நிதியில் 22.5 சதவீதம் தொகையானது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்ட தனி நபர்/குழு பயனாளிகளுக்கு பயன்படுத்தப்படுவதைப் போல ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட அடிப்படையில் தனி நபர் பயன்பெறும் பணிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

3. எடுக்கக் கூடாத / தடை செய்யப்பட்ட பணிகள்:

1. நகர்ப்புற பகுதிகளில் எவ்வித பணிகளும் எடுத்தல் கூடாது.
2. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் தவிர இதர துறைகள் மூலம் மேற்கொள்ள வேண்டிய பணிகள்.
3. மத்திய மற்றும் மாநில அரசு, பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.
4. அனைத்து விதமான பழுது பார்ப்பு, பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள்.
5. தனி நபர் பயன் பெறும் வகையில் வீடுகள், கச்சா வீடுகள் கட்டுதல், வீடுகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள்.
6. எந்தவொரு உபகரணங்கள் மற்றும் அசையும் பொருட்கள் வாங்குதல்.
7. குட்டைகள், ஊரணிகள், குளங்கள், ஆறுகள், கால்வாய்கள் மற்றும் அதுபோன்றவற்றை தூர்வாரும் பணிகள்.
8. சரளை / கப்பி சாலைகள் அமைத்தல்.
9. கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்தல்.
10. சமுதாயக் கூடம் கட்டுதல் (ஊரக பகுதிகளில் ஏற்கனவே போதுமான அளவுக்கு சமுதாயக் கூடங்கள் உள்ளன. இக்கட்டிடங்களை முறையாக உபயோகிக்காததால் கணக்குத் தணிக்கைக் குழுவும் தணிக்கைத் தடைகளை எழுப்பி அவை இன்றும் நிலுவையாக உள்ளன.
11. குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல் (இப்பணிகளை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படக் கூடாது. கிராம ஊராட்சிகளின் நிதியிலிருந்தோ அல்லது இதர நிதியிலிருந்தோ மேற்கொள்ளப்பட வேண்டும்).
12. நூலக கட்டிடங்கள் கட்டுதல் (அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் நூலக கட்டிடங்கள் கட்டப்படுவதால்)
13. நில எடுப்பு / நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல்.
14. பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
15. மின் கட்டணம், எரிபொருள் போன்றவற்றிற்குச் செலுத்துவது போன்ற அனைத்து வரவினம் அல்லது தொடர் செலவினங்கள்.
16. வணிக நிறுவனங்கள் சம்பந்தமான அனைத்து பணிகள்.
17. மதம் தொடர்பான வழிபாட்டு இடங்களில் பணிகள் / மதச்சார்புடைய குழுக்களுக்கு சொந்தமான இடங்களின் பணிகள்.
18. புராதன சின்னங்கள், நினைவிடங்கள், சிலைகள், நுழைவு வாயில்கள்/ வரவேற்பு வளைவுகள் அமைத்தல்.

4. அனுமதிக்கப்பட்ட/ முன்னுரிமைப்பணிகள்:

ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் மூலம் பத்தி 3–ல் தெரிவிக்கப்பட்டுள்ள எடுக்கக் கூடாத / தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியல் தவிர இதர புதிய பணிகள் மேற்கொள்ளலாம். இருப்பினும், கீழ்க்கண்ட புதிய பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் மூலம் பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ளலாம்.

i) சிமெண்ட கான்கிரீட் சாலைகள்.
ii) புதிய சத்துணவு மைய கட்டிடங்கள் / சமையற் கூடங்கள் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்கள்.
iii) பொது விநியோக கட்டிடங்கள்.
iv) சிறுபாலங்கள்/ ஒடு பாலங்கள் மற்றும் நடை பாலங்கள்.
v) கதிரடிக்கும் களம்.
vi) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மயான கொட்டகைகள்.
vii) சரளை/ கப்பி சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல்.
viii) ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர்கள்கட்டுதல்.
ix) தெரு விளக்கு விரிவாக்கம்.
x) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டிடங்கள் (திருத்திய வடிவமைப்பு தனியே அனுப்பி வைக்கப்படும்) .
xi) புதிய ஊராட்சி அலுவலக கட்டிடங்கள் மன்ற கூட்ட அறை மற்றும் ஏற்கனவே உள்ள கிராம ஊராட்சி அலுவலக கட்டிடங்களில் பதிவறை கட்டுதல். (திருத்திய வடிவமைப்பு தனியே அனுப்பி வைக்கப்படும்)
xii) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட ஊரணிகளில் கருங்கல் பதித்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், படித்துறைகள், வரத்து/ உபரி நீர் கட்டமைப்புகள் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மலைப் பகுதியினைக் கருத்தில் கொண்டு சாலையோர தடுப்புச் சுவர்கள் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

5. பணிகள் தேர்வு செய்தல் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்:

உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நிதி ஒதுக்கீட்டுக்கேற்பவும், மேலே கூறப்பட்ட திட்ட செயலாக்க வழிமுறைகளின்படியும் பணிகளைத் தேர்வு செய்திட வேண்டும். தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர், பரிந்துரைக்கப்பட்ட அனைத்துப் பணிகளையும் தொகுத்து வழிமுறைகளின்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதா என்பதை முதற்கட்டமாக ஆய்வு செய்திட வேண்டும். அதன் பின் தொடர்புடைய ஒன்றியப் பொறியாளர்கள் பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிப்பர். சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னரே, திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் நிர்வாக அனுமதிக்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துருவினை அனுப்புவார். அதன் பிறகு, மேற்கண்ட பணிகளுக்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலர்களால் தயார் செய்யப்படும். பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட பின்னரே மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதிக்காக கருத்துருக்களை அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. பணிகள் பட்டியல் மற்றும் மதிப்பீடுகளை மேலாய்வு செய்தல்:

ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கருத்துருக்கள் வரப்பெற்ற பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர், அலுவலர்களை ஆய்வுக்கு அனுப்பி வைத்து பணிகளின் அவசியத்தை

கண்டறிவதுடன் மதிப்பீடுகள் சரியாக தயார் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர், நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்பாக 1 சதவீதம் பணிகளை அவரளவில் மேற்பார்வை செய்ய வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் மற்றும்செயற்பொறியாளர் (ஊவ) ஒவ்வொருவரும் 5 சதவீதம் பணிகளையும், உதவி செயற் பொறியாளர் (ஊவ) மற்றும் இதர அலுவலர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 20 சதவீதம் பணிகளையும் பார்வையிட்டு மதிப்பீடுகள் உரிய முறையில் தயார் செய்யப்பட்டுள்ளதை மேலாய்வு செய்ய வேண்டும்.

7. நிர்வாக அனுமதி வழங்குதல்:

பத்தி 6–ல் தெரிவித்தபடி பணிகளை மேலாய்வு செய்தபின் மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். தேவைப்படின், பணிகள் பட்டியலில் மாற்றம் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழு உரிமை உண்டு.

8. பணிகளை செயல்படுத்துதல்:

ஊரக கட்டமைப்பு திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் பணிகள் **ஒப்பந்தப் புள்ளி அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.** அரசாணை (நிலை) எண் 203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 20.12.2007–ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், பணிகள் வகை மற்றும் நிலை) விதிகள் 2007–ல், அறிவிக்கை–2ல் உள்ள பட்டியல்–1ல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

9. ஆவணப்படுத்துதல்:

ஊரக கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளின் முழு விவரங்களையும் முறையாக ஆவணப்படுத்த வேண்டும். பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும், பணிகள் நடைபெறும் போதும் மற்றும் பணிகள் நிறைவுற்ற பின்னரும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

10. சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை கலந்தாலோசித்து மேற்கண்ட திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்திற்கு கூடுதல் நிதி கோரப்படமாட்டாது என்பதுடன், மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விகிதாச்சாரம் மாற்றப்படமாட்டாது எனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்.

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்